**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**
**2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 269/2021**
**CNR.No. TNDG03-006824-2021**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண். 1005/2020
சட்டப்பிரிவு 392 of IPC

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1. ஆறுமுகம் (எ) பரட்டை (33/2021), –A1
த/பெ. வேங்கைபிச்சை,
பொன்பெருமாள்கோவில் தெரு,
குலசேகரன்கோட்டை,
T. வாடிப்பட்டி,
மதுரை.

2. பாலமுருகன் (21/2021), – A2
த/பெ. கார்த்திகைசாமி,
போடியகவுண்டன்பட்டி,
குள்ளிசெட்டியபட்டி,
நிலக்கோட்டை,
திண்டுக்கல்.

3. அரசராஜன் (19/2021), – A3
த/பெ. ஆனந்தன்,

தெற்குத் தெரு,
போடிநாயக்கன்பட்டி,
குள்ளிசெட்டியபட்டி,
நிலக்கோட்டை,
திண்டுக்கல். ...எதிரிகள்

## Case – Summary

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case No.269 of 2021 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police<br>Thadicombu PS. Dindigul in Cr.No. 1005/2020 |
| 3. | Name of the accused | Arumugam @ Parattai - A1<br>Balamurugan- A2<br>Arasarajan - A3 |
| 4. | Father's Name | Vengaipitchai- A1<br>Karthigaisamy- A2<br>Anandhan- A3 |
| 5. | Occupation | - |
| 6. | Residence | 1. Ponperumal Kovil Street, Gulasekarankottai, T. Vadipatti, Madurai.<br><br>2. Bodiyagoundanpatti, Kullichettiyapatti, Nilakottai.<br><br>3. South Street, Bodiyagoundanpatti, Kullichettiyapatti, Nilakottai. |
| 7. | Age | 33/2020<br>21/2020<br>19/2020 |

<table>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">23.09.2020</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">23.09.2020<br>23.04.2021</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">28.10.2020 – A1 (PT warrant)<br>26.10.2020- A2, A3</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">1. 23.12.2020-A1<br>2. 26.11.2020-A2<br>3. 26.11.2020-A3</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td colspan="3">22.11.2022</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 15.11.2024 the were accused questioned on substance of accusation U/s.392 of IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>16.06.26</td><td>16.06.26</td></tr>
<tr><td>PW2</td><td>16.06.26</td><td>16.06.26</td></tr>
<tr><td>PW3</td><td>23.06.26</td><td>23.06.26</td></tr>
<tr><td>PW4</td><td>23.06.26</td><td>23.06.26</td></tr>
<tr><td>PW5</td><td>14.07.26</td><td>14.07.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code - Closed of trial</td><td colspan="3">04.08.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் தான் அ.சா.1ஐ அடித்து அவரிடமிருந்து 1/2 பவுன் தங்ககாசை கொள்ளையடித்துச் சென்றார்கள் என்பதை அரசு தரப்பில் இருந்து எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 392–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, 1 முதல் 3 எதிரிகளைக் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு 23.04.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.269/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட 1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.S. மணிகண்டன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2,3 எதிரிகள் தரப்பில் திரு.P.சங்கர்குரு, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 22.09.2020ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் TN 33 BK 3080 அசோக் லைலேண்ட்

லாரியில் தூத்துக்குடியில் உள்ள மகேஸ்வரி உப்பு ஆலையில் உப்பு லோடு ஏற்றிக்கொண்டு தூத்துக்குடியில் இருந்து கிளம்பி 23.09.2020ம் தேதி அதிகாலை சுமார் 03.50 மணியளவில் திண்டுக்கல் – கரூர் ரோடு ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் அருகே அவரது வாகனத்தை நிறுத்திவிட்டு இயற்கை உபாதையை கழிப்பதற்காக லாரியில் இருந்து கீழே இறங்கி அருகிலுள்ள காட்டிற்குள் செல்வதைப் பார்த்த எதிரிகள் மூன்றுபேரும் புகார்தாரரை முதுகில் உதைத்து கீழே தள்ளிவிட்டு கை, கால்களை கட்டிவிட்டு, வாயை பொத்தி பணம் ரூ.10,000/–த்தையும் 1/2 பவுன் எடையுள்ள தங்க காசையும் வழிப்பறி செய்த குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவு 392–ன் கீழ் எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 22.11.2022 நாளன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 392 இதச–ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக்கூறியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு

எதிராக இதச பிரிவு 392–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுப் பொருட்கள் எதும் குறியீடு செய்யப்படவில்லை.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் "கடந்த 2020ம் வருடம் திண்டுக்கல் தாடிக்கொம்பு ரோட்டில் உள்ள ரிலையன்ஸ் பெட்ரோல் பங்கில் சூப்பர் வைசராக வேலை செய்து வந்ததாகவும், அப்போது வழக்கமாக லாரிகள் இரவு நேரங்களில் நிறுத்தி அதில் ஓட்டநராக வேலை செய்து வரும் நபர்கள் இரவில் தங்கி குளித்து செல்வது வழக்கம் என்றும், ஈரோட்டைச் சேர்ந்த அருள்குமார் என்பவர் இரவு லாரியை நிறுத்திவிட்டு இயற்கை உபாதைக்காக வெளியில் சென்றவரை 3 நபர்கள் அடித்து அவரிடம் இருந்த ரூ.10,000/–பணத்தையும், 1/2 பவுன் தங்க காசையும் பறித்துச் சென்றதாக காலையில் தன்னிடம் அருகில் இருந்த நபர்கள் தெரிவித்தார்கள் என்றும் சம்பவம் குறித்து காலையில் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 அவரது சாட்சியத்தில் கடந்த 2020ம் வருடம் தாடிக்கொம்பு ரோட்டில் உள்ள ரிலையன்ஸ் பெட்ரோல் பங்கில் சூப்பர் வைசராக வேலை செய்து வந்ததாகவும், அப்போது முதல்நாள் இரவு நடந்த கொள்ளை சம்மந்தமாக போலீசார் படம் வரைந்து சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அவரது சாட்சியத்தில் கடந்த 13.09.2020ம் தேதி தனது நண்பர் பாலமுருகன் பயன்படுத்திய இருசக்கர வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்குச் சென்றதாகவும், அங்கு திருடிய நபர்கள் இருந்தார்கள் என்றும், திருடுபோன வண்டியை அடையாளம் காட்டியதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சி அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், தனது நண்பர் பயன்படுத்திய இருசக்கர வாகனம் கடந்த 13.09.2020ம் தேதி தெலைந்துவிட்டதாகவும், அப்போது தனது நண்பருடன் அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்குச் சென்றதாகவும், அங்கு

திருடிய நபர்கள் இருந்தார்கள் என்றும், திருடுபோன வண்டியை அடையாளம் காட்டியதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், "கடந்த 23.09.2020ம் தேதி கொடுத்த புகாரைப் பெற்று சார்பு ஆய்வாளர் நகர்வடக்கு காவல் நிலைய குற்ற எண். 1005/2020 சட்டப்பிரிவு 392 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு ஆய்வாளர் எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரிகளைத் தேடிவந்த நிலையில் எதிரிகள் அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளர் 24.10.2020ம் தேதி மேற்படி காவல் நிலையத்திற்கு உட்பட்ட வழக்கில் தொடர்புடைய எதிரிகளை விசாரிக்க அவர்கள் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்றத்தோடு தொடர்புடையதை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் தன்னிச்சையாக கொடுத்ததைப் பெற்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தியும், தாடிக்கொம்பு வழக்கில் கைப்பற்றப்படட வழக்குச் சொத்தான 4 கிராம் தங்க காசு ஒன்றையும் கைப்பற்றி படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்கள் ன்றும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 392 ஆக குற்ற இறுதி

அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ. 5 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்றது.

**V.எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:**

9. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்டபின்பு எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 17.06.2026 நாளன்று தொகுத்தளித்து வினாவியபோது, அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார்கள். அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

**VI. வாதுரைகள்:**

**1. அரசு தரப்பில்:**

10. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் கேள்விப்பட்ட மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதாகவும், அரசு தரப்பால் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**2. எதிரிகள் தரப்பில்:**

11. இதற்கு மாறாக எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், மேற்படி குற்றச் சம்பவத்தில் எதிரிகள் ஈடுபடவில்லை என்றும், இவ்வழக்கில் புகார்தாரரை விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரிகளை அடையாளப்படுத்தி எந்தவொரு சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுவிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை:**

12. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான முறையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா?என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

13. அரசு தரப்பு வழக்கானது, கடந்த 22.09.2020ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் TN 33 BK 3080 அசோக் லைலேண்ட் லாரியில் தூத்துக்குடியில் உள்ள மகேஸ்வரி உப்பு ஆலையில், உப்பு லோடு ஏற்றிக்கொண்டு தூத்துக்குடியில் இருந்து கிளம்பி 23.09.2020ம் தேதி

அதிகாலை சுமார் 03.50 மணியளவில் திண்டுக்கல் – கரூர் ரோடு ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் அருகே அவரது வாகனத்தை நிறுத்திவிட்டு இயற்கை உபாதையை கழிப்பதற்காக லாரியில் இருந்து கீழே இறங்கி அருகிலுள்ள காட்டிற்குள் செல்வதைப் பார்த்த எதிரிகள் மூன்றுபேரும் புகார்தாரரை முதுகில் உதைத்து கீழே தள்ளிவிட்டு கை, கால்களை கட்டிவிட்டு, வாயை பொத்தி பணம் ரூ.10,000/–த்தையும் 1/2 பவுன் எடையுள்ள தங்க காசையும் வழிப்பறி செய்த குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவு 392–ன் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

14. இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது, சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## குற்ற நிகழ்வு

15. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பிலிருந்து குறியீடு

செய்யப்பட்ட அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலனை செய்யும் போது, "கடந்த 22.09.2020ம் தேதி வரை மாலை சுமார் 05.00 மணியளவில் TN 33 BK 3080 அசோக் லைலேண்ட் லாரியில் தூத்துக்குடியில் உள்ள மகேஸ்வரி உப்பு ஆலையில் லோடு ஏற்றிக்கொண்டு கர்நாடகா மாநிலம் உப்புலிக்கு செல்வதற்காக தூத்துக்குடியிலிருந்து கிளம்பி திண்டுக்கல் வழியாக செல்லும்போது 23.09.2020ம் தேதி அதிகாலை 03.50 மணியளவில் திண்டுக்கல் – கரூர் ரோடு ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் அருகே எனது வாகனத்தை நிறுத்திவிட்டு இயற்கை உபாதையை கழிப்பதற்காக லாரியில் இருந்து கீழே இறங்கிய போது ஒரு டுவீலரில் வந்த பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய 20 முதல் 30 வயது மதிக்கத்தக்க மூன்று நபர்கள் எனது முதுகில் உதைத்து கீழே தள்ளிவிட்டு எனது கை, கால்களை கட்டிவிட்டு வாயை பொத்தி உன்னிடம் இருக்கும் பணம், பொருட்களை எடுடா என்று கேட்டு, நான் வழிச் செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ. 10,000/– மற்றும் 1/2 பவுன் எடையுள்ள தங்க காசு ஆகியவற்றை பிடிங்கிக் கொண்டார்கள்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பிலிருந்து முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்படாத போதிலும், முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும் போது மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன. மேலும், அ.சா.ஆ.6 ஆன மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் போன்றவற்றைப் பரிசீலனை செய்யும்போதும் மற்றும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.9 ஆன அத்தாட்சி மற்றும் அ.சா.ஆ.10 ஆன படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துகளைப் பரிசீலனை செய்யும் போதும் குற்ற நிகழ்வு நடந்துள்ளது என்பதை அரசு

தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. இருப்பினும் எதிரிகள் தான் மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கு எதிரிகளை கைது செய்து பின் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதை பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

<u>**கைது ஒப்புதல் வாக்குமூலம் அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்**</u>

17. குற்ற நிகழ்வு நடந்த பின்பு எதிரிகளை கைது செய்து 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலீசார்கள் படிவம் 91 மூலம் அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்துக்களை கைப்பற்றியுள்ளனர்.

18. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளதால் அதை வைத்து எதிரிகள் தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருத இயலாது. மேற்படி குற்ற சம்பவத்தை எதிரிகள் தான் செய்தார்களா என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பார்க்கையில், ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் தங்களது முதல் விசாரணையில் "கடந்த 13.09.2020ம் தேதி தனது நண்பர் பாலமுருகன் பயன்படுத்திய இருசக்கர வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்திற்குச் சென்றதாகவும், அங்கு

திருடிய நபர்கள் இருந்தார்கள் என்றும், திருடுபோன வண்டியை அடையாளம் காட்டியதாக" சாட்சியம் அளித்துள்ளார்கள்.

19. ஆனால், அவர்கள் தங்களது குறுக்கு விசாரணையில், "என்னை அம்மையநாயக்கனூர் போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் என்றும், வேறு எந்த போலீசாரும் விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் எந்தபொருள் காணாமல் போனது பற்றியோ அதை யாரிடம் இருந்து எங்கு எப்போது போலீசாரால் கைப்பற்றப்பட்டது என்றோ எனக்கு தெரியாது என்றால் சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர, எதிரிகளிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் அத்தாட்சியில் கைப்பற்றியது பற்றியோ, எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது பற்றியோ உறுதியூட்டும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

20. ஆகவே, திருட்டு சம்பந்தமான குற்ற வழக்குகளில் அதிலும், எதிரிகளை அடையாளம் காண முடியாத வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அளிக்கின்ற சாட்சியங்களை வைத்து மட்டுமே எதிரிகளின் குற்றச் செயலை அறிய முடியும். ஆனால், இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை உறுதியூட்டும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையில் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்றும், அந்த சொத்துக்கள் அனைத்தும்

எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றபட்டதா என்றும் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

**<u>புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

21. மேலும், இவ்வழக்கில் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி அவரது முதல் விசாரணையில், "இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் அம்மையநாயக்கனார் காவல் ஆய்வாளர் 24.10.2020ம் தேதி மேற்படி காவல் நிலையத்திற்கு தொடர்புடைய எதிரிகளை விசாரிக்க அவர்கள் தாடிக்கொம்பு காவல் நிலைய கற்றத்தோடு தொடர்புடையதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் தன்னிச்சையாக கொடுத்தார்கள். அதை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். தாடிக்கொம்பு வழக்கில் பறித்துச் சென்ற 4 கிராம் தங்க காசு ஒன்றையும் TN 59 CD 1279 YAMAHA Scooty மற்றம் கத்தி ஒன்றையும் ஆஜர் செய்யவே அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

22. ஆனால், மேற்சொன்னவாறு இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டதாகவோ, அல்லது அவர்கள் ஈடுபட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது அவர்களிடமிருந்து வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது பற்றியோ, அத்தாட்சி தயார் செய்யப்பட்டது பற்றியோ உறுதியூட்டும் வகையில் எந்தவொரு சாட்சியமும் அளிக்காத

நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி 1 முதல் 3 எதிரிகளை எவ்வாறு இவ்வழக்கில் எதிரிகளாக சேர்த்தார் என்றோ அல்லது எவ்வாறு அவர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்று எதிரிகளின் குற்றச் செயல்களை உறுதியூட்டும் வகையில் நிரூபிக்கும் விதமாக புலன் விசாரணை அதிகாரி சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

23. மேலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான புகார்தாரர் இவ்வழக்கில் இறந்துவிட்டதாக அரசு தரப்பிலிருந்து இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் புகார்தாரரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எதிரிகளை அடையாளப்படுத்தி எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரிகளின் அடையாளத்தை உறுதியூட்டும் விதமாக அடையாள அணிவகுப்பு நடத்தி அறிக்கை சமர்பிக்கவில்லை. ஆகவே, வழக்கின் எதிரிகள் தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டு அவர்களிடமிருந்து தான் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா? என்ற சந்தேகத்தை, புலன் விசாரணை அதிகாரி, தனது புலன் விசாரணை மூலம் உறுதியூட்டும் வகையில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் தான் அ.சா.1ஐ அடித்து அவரிடமிருந்து 1/2 பவுன் தங்ககாசை கொள்ளையடித்துச் சென்றார்கள் என்பதை அரசு தரப்பில் இருந்து எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 392–ன்

கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, 1 முதல் 3 எதிரிகளைக் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

25. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட RPR No. 20/2021ல் உள்ள வழக்குச் சொத்தான 1/2 பவுன் தங்ககாசை இந்நீதிமன்ற Crl.M.P.No.2195/2021 நாள்.17.02.2021 உத்தரவின்படி மனுதாரர் / வழக்குச் சொத்தின் உரிமையாளர் மனு செய்து ஏற்கனவே இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீடு காலத்திற்கு பின்பு மனுதாரர்/வழக்குச் சொத்தின் உரிமையாளருக்கு நிரந்தரமாக பாத்தியப்பட உத்தரவிடப்படுகிறது.

26. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக இரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

27. இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம்

ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை, இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR Digitally signed by DINESH KUMAR Date: 2026.08.27 14:34:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | அம்பேத்ராஜா<br>த/பெ. சீனிகோபால் | 16.06.2026 | – |
| 2. | அ.சா.2 | சந்தனகுமார்<br>த/பெ. காளிமுத்து | 16.06.2026 | – |
| 3. | அ.சா.3 | புவனேஷ்வரன்<br>த/பெ. ராஜபாண்டி | 23.06.2026 | அ.சா.ஆ.1,<br>அ.சா.ஆ.2 |
| 4. | அ.சா.4 | கார்த்திக்<br>த/பெ செல்வகுமார் | 23.06.2026 | அ.சா.ஆ.3,<br>அ.சா.ஆ.4 |
| 5. | அ.சா.5 | முனியாண்டி<br>த/பெ. சுப்பிரமணி | 14.07.2026 | அ.சா.ஆ.5<br>முதல்<br>அ.சா.ஆ.6 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.3 | 24.10.20 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.3 | 24.10.20 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 24.10.20 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா. 4 | 24.10.20 | அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.7 | 23.09.20 | புகார் |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.7 | 23.09.20 | மாதிரி வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.9 | 23.09.20 | பார்வை மகஜர் |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.9 | 24.10.20 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 9. | அ.சா.ஆ.9 | அ.சா.9 | 24.10.20 | அத்தாட்சி |
| 10. | அ.சா.ஆ.10 | அ.சா.9 | 24.10.20 | படிவம் 91 |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள் –** இல்லை

DINESH KUMAR Digitally signed by DINESH KUMAR Date: 2026.08.27 14:34:18 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**குறிப்பு:**

1. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. 2,3 எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்குமேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
4. 1ம் எதிரி வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார்.